வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 22.03.2025 சனிக்கிழமை இதழ் : 83 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


## தமிழர்களுக்கு நீதி வழங்க வேண்டும்!

### முன்னாள் ஜனாதிபதி ரணில்

- மாகாண சபைகளுக்கு அதிகாரம்
- குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்
- சர்வதேச நீதிமன்றிலிருந்து இலங்கையை பாதுகாத்தேன்
- நாங்கள் போரிடாவிட்டால் ஐரோப்பா இல்லை

கொழும்பு, மார்ச் 22

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். உள்நாட்டு பொறிமுறையின் கீழ் தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டவேண்டும். மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். யார் குற்றவாளி என்றாலும் தண்டிக்கப்படவேண்டும் இவ்வாறு தான் வலியுறுத்தினார் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



அத்துடன், இலங்கையை சர்வதேச நீதி மன்றத்துக்கு கொண்டு செல்வதை எப் போதும் தான் எதிர்த்து வந்துள்ளார் என் றும் அவர் கூறியுள்ளார்.

நேர்காணல் ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த 11



## பயிற்சி விமானம் விழுந்து விபத்து!

கொழும்பு, மார்ச் 22

விமான படைக்கு சொந்தமான பயிற்சி விமானம் குருநாகல் - வாரியபொலவில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது விழுந்து தீப்பிடித்து எரிந்தது. விமானத்தின் இரண்டு விமானிகளும் பாதுகாப்பாக வெளியேறி தரையிறங்கினர்.

இந்த விமானத்தில் தலைமை பயிற்றுவிப்பாளர் விமானியும் பயிற்சி விமானியும் இருந்தனர். 11

## 114 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது பட்ஜெட்!

கொழும்பு, மார்ச் 22

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் 114 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று வெள்ளிக்கிழமை நிறைவேறியது.

வரவு - செலவு திட்டத்துக்கு ஆதரவாக 159 வாக்குகளும் எதிராக 45 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன் மூலம், வரவு - செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 114 பெரும்பான்மை வாக்குகளால் 11

## கடலில் குளிக்க சென்ற இளைஞர் மூழ்கி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இளவாலை - சேந்தாங்குளம் கடலில் குளிக்கச் சென்ற இணுவிலை சேர்ந்த பி. சாருஜன் (வயது - 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த இளைஞர் தனது நண்பர்கள் 14 பேருடன் சேர்ந்து குளிப்பதற்காக நேற்றையதினம் சேந்தாங்குளம் கடலுக்கு சென்றனர். அவர்கள் குளித்துக் கொண்டிருந்த வேளை கடல் அலையால் குறித்த இளைஞர் இழுத்துச் செல்லப்பட்டார்.

கடல் அலை இழுத்துச் சென்று காணாமல் போன இளைஞரை அவரின் நண்பர்கள் அந்தப் பகுதி மீனவர்களின் உதவியுடன் தேடினர். நீண்ட தேடுதலின் பின்னர் 11

## சம்பூர் மின்சார நிலையம் இந்தியாவுடன் ஒப்பந்தம்!

### சபையில் அறிவித்தார் ஜனாதிபதி

- மன்னார் காற்றாலை திட்டம் ஆரம்பிக்கப்படும்
- முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் இரத்தாகும்
- 35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு

கொழும்பு, மார்ச் 22

**ஏப்ரல் 5ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவார். இதன் போது சம்பூர் மின்நிலைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். மன்னாரில் 50 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யயும் காற்றாலை திட்டம் ஆரம்பிக்கப்படும் - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**



அத்துடன், இந்திய அரசாங்கத்துடன் கூட்டிணைந்து சம்பூரில் மின்நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்திய நிறுவனத்துக்கும் மின்சார சபைக்கும் 50: 50 என்ற வகையில் உரிமத்தை கொண்டதாக கூட்டு நிறுவனம் ஒன்று நிறுவப்படும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவை இரத்து செய்வேன். ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளின் சிறப்பு சலுகையை இரத்துச் செய்யும் சட்டமூலம் வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும். எவருடனும் எனக்கு தனிப்பட்ட பகைமை கிடையாது. ஆகவே, நாட்டுக்காக எம்முடன் ஒன்றிணையுங்கள் - என்று இதன்போது அவர் எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பும் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே ஜனாதிபதி அநுர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 11

சந்திவெளி படுகொலை:

## பிள்ளையான் குழுவை சேர்ந்த நால்வருக்கு மரண தண்டனை!

மட்டக்களப்பு, மார்ச் 22

சந்திவெளியில் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற குற்றத்துக்காக பிள்ளையான் தலைமையில் இயங்கிய ஆயுதக் குழுவை சேர்ந்த நால்வருக்கு மரண தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பளித்தார் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. ஜே. பிரபாகரன்.

மட்டக்களப்பு - சந்திவெளியில் கடந்த 2007 மார்ச் 18ஆம் திகதி சந்திவெளியைச் சேர்ந்த மயில்வாகனம் ரவீந்திரன் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது, அந்தப் பகுதியில் இயங்கிய பிள்ளையான் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) தலைமையிலான ஆயுதக் குழுஅவரை 11

அதிக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட

## பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவ சிக்கலே காரணம்!

கொழும்பு, மார்ச் 22

பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தில் நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தை பூர்த்தி செய்வதிலுள்ள சிக்கல்கள் மற்றும் வேட்பாளர்களின் ஆதார ஆவணங்கள் இல்லாமையாலேயே கணிசமான எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

336 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் சமர்ப்பித்த பல வேட்புமனுக்கள் பல்வேறு காரணங்களுக்காக அந்தந்த தேர்தல் அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டன. 11

## ஐ.எம்.எவ்வுக்கு அநுரமீதே அன்பு

### அரசாங்கம் சொல்கிறது

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவையும் தற்போதைய அரசாங்கத்தையும் 'உண்மையான அன்பு' என்று, ஐ. எம். எவ். ஏற்றுக் கொண்டுள்ளது - இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணிடம் அத்துமீறியவருக்கு ஒத்திவைத்த 6 மாதங்கள் சிறை!

## ரூ. 10 ஆயிரம் இழப்பீடும் செலுத்த உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 22

வெளிநாட்டு பெண் ஒருவரிடம் அத்துமீறிய அரச பேருந்தின் சாரதி ஒருவருக்கு 6 மாதங்கள் ஒத்திவைத்த சிறைத் தண்டனை விதித்தது ஊர்காவற்துறை நீதிமன்றம். அத்துடன், அந்தப் பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறும் ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது.


இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் வந்த 27 வயது சுற்றுலா பயணி ஒருவர் நேற்றுமுன்தினம் நயினாதீவு செல்வதற்காக அரச பேருந்து ஒன்றில் குறிகாட்டுவான் நோக்கி பயணித்துள்ளார்.

அந்தப் பெண் பயணித்த பேருந்தின் நடத்துநர் குறித்த பெண்ணிடம் அத்துமீறி நடந்துள்ளார். இது தொடர்பில், பாதிக்கப்பட்ட பெண் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விதான பத்திரண தலைமையிலான பொலிஸ் குழுவினர் விரைந்து செயல்பட்டு சந்தேகநபரை கைது செய்தனர்.

சந்தேகநபர் ஊர்காவற்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டவேளை குற்றவாளிக்கு ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபாய் இழப்பீடு செலுத்துமாறும் உத்தரவிட்டதுடன், ஒத்திவைக்கப்பட்ட 6 மாதங்கள் சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார் நீதிவான். (ஜ- 05)




# மரணமடைந்த மாணவிக்கு தேகாந்த நிலையில் பட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் கல்வி கற்று, கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் சுகவீனம் காரணமாக மரணமடைந்த மாணவி ஒருவருக்குத் தேகாந்த நிலையில் கலைமாணி பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாளின் முதலாவது அமர்வின் போது சுபீனா குணரத்னம் என்ற மாணவி கலைமாணி பட்டத்துக்கு உரித்துடையவராக்கப்பட்டமையை உறுதிப்படுத்தி தேகாந்த நிலையில் அவரின் பட்டம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

பெற்றோர் பட்டம் பெற்ற அந்தத் தருணம் உணர்ச்சி மிகுந்ததாக அவையில் இருந்தவர்கள் கண்ணீர் மல்க அமர்ந்திருந்தமையைக் காணக்கூடியதாக விருந்தது. (ஜ)

# தமிழில் பட்டப்பின் டிப்ளோமா கற்றுத் தேர்ந்த பௌத்த துறவி!



யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழில் பட்டப்பின் டிப்ளோமாவை பயின்று பௌத்த துறவி ஒருவர் பட்டம் பெற்றிருக்கிறார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் மூன்றாம் நாளின் முதலாவது அமர்வின் போது சன்னாஸ்கம இந்திரானந்த தேரர் என்ற பௌத்த துறவியே, உயர்பட்டப்படிப்புகள் பீடத்தால் நடத்தப்பட்ட தமிழில் பட்டப்பின் தகைமைக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து பட்டம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜாவால் சம்பிரதாயபூர்வமாக இவரது பட்டம் கையளிக்கப்பட்டது. (ஜ)

# துப்பாக்கியுடன் சந்தேகநபர் கைது!

முல்லைத்தீவு, மார்ச் 22

சட்டவிரோத துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று கேப்பாபிலவு பகுதியில் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கேப்பாபிலவில் குடும்ப பிணக்கு காரணமாக ஏழு நாள் தடுப்புகாவலில் இருந்து விடுவிக்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் இரவு மனைவியுடன் முரண்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து, இடியன் துவக்குடன் கொண்டு வந்துள்ளார். இது தொடர்பில், பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் குறித்த குடும்பஸ்தர் கைது செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் 36 வயது நபர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

# வவுனியா விபுலானந்த கல்லூரி ஆய்வுகூடம் மாணவரால் சேதம்!

வவுனியா, மார்ச் 22

வவுனியா விபுலானந்த கல்லூரியின் ஆய்வுகூடத்தின் கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு, க. பொ. த. சாதாரண தர பரீட்சை எழுதும் மாணவர்களை இதனை சேதப்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து, குறித்த நிலையத்துக்குப் பொறுப்பான பரீட்சைப் பொறுப்பதிகாரி, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் பாடசாலைக்கு சென்று நிலமையை பார்வையிட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-10)

# 15 வயது சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்தியவர் கைது!

வவுனியா, மார்ச் 22

15 வயது சிறுமியை பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

வவுனியா - தோணிக்கல்லை சேர்ந்த 15 வயது சிறுமியை காதலிப்பதாகக் கூறி அந்தப் பகுதியை சேர்ந்த இளைஞர் கூறியுள்ளார். தொடர்ந்து சிறுமியை அவர் ரீதியாக பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தியுள்ளார். இது தொடர்பில், சிறுமியின் தாயார் அளித்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இளைஞரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஜ-10)

# சி.ஐ.டியினரின் விசாரணையில் ஷிரந்தியும்

கொழும்பு, மார்ச் 22

ஷிரந்தி ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட கம்பஹா மாவட்டத்தில் இடம்பெற்ற நில பரிவர்த்தனைகள் குறித்து குற்றப் புலனாய்வுத் துறை விசாரிக்கவுள்ளதாக தொழிலாளர் பிரதி அமைச்சர் மகிந்த ஜெயசிங்க பாராளுமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், இதுதொடர்பாக பதில் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இம்புல்கொட மற்றும் மாகோல பகுதிகளில் உள்ள நிலங்கள் 2012 இல் வாங்கப்பட்டு 2023இல் விற்கப்பட்டன. மகிந்த ராஜபக்ஷ ஆன்மீக அறக்கட்டளையின் கீழ் 2012 இல் இஹல இம்புல்கொடவில் ரூ. இலட்சம் ரூபாய்க்கு வாங் கப்பட்ட ஒரு நிலம் ஒரு கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதேபோல, மாகோலவில் ரூ. 10 இலட்சத்துக்கு வாங்கப்பட்ட மற்றொரு நிலம் ஒரு கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த நிலங்களின் உரிமையாளர் தங்காலை கார்ல்டன் ஹவுஸை சேர்ந்த ஷிரந்தி விக்கிரமசிங்க ராஜபக்ஷ ஆவார் - என்றும் கூறினார். (ஜ)

# கிளிநொச்சியில் சட்டவிரோத வலைகள் அகற்றப்பட்டன!

கிளிநொச்சி, மார்ச் 22

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத வலைகள் மற்றும் அனுமதிப்பத்திரம் பெறப்படாது அமைக்கப்பட்ட கலங்கட்டி வலைகள் அகற்றப்பட்டுள்ளன.

கடற்றொழில் சங்கங்கள் வைத்த முறைப்பாட்டையடுத்து நேற்று முன்தினம் கிராஞ்சி பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இந்த வலைகள் அகற்றப்பட்டன.

இவற்றுக்கு எவரும் உரிமை கோராத நிலையில் அவை குறித்த பொருட்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஜ)

# வேட்புமனு தாக்கலின்போது சதி எதுவும் நடக்கவில்லை!

## அமைச்சர் சந்திரசேகர்



யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணத்தில் வேட்பு மனு தாக்கலின் போது குளறு படிகள் அல்லது சதி நடவடிக் கைகள் எதுவும் இடம்பெறவில்லை என்று கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கட்சிக ளின் 22 வேட்பு மனுக்களும் சுயேச்சை குழுக்களின் 13 வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன. இதன் பின்னணியில் அரசியல் சதி இருக்கிறது என்று குற்றஞ்சாட்டப்பட் டது. இந்த நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர்,

சிலரின் குற்றச்சாட்டை பார்க்கிறபோது அவர்களின் வேட்பு மனு தயாரிப்பில் அவர்களின் அலுவலகங்களுக்குச் நாங்கள் சென்று ஏதோ திருகுதாள வேலைகளை செய்தது போல கூறுகிறார்கள்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் என்பது வெற்றுக்கதைகள் மட்டும்தான். ஆகவே, வெறும் கதைகளை யாரும் கதைக்க தேவையில்லை. எங்கள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம். தாங்கள் தவறுகளை இழைத்துவிட்டு எங்கள் மீது குற்றஞ்சாட்டுகிற இந்த மாதிரியான கூற்றுகளுக்கு நாங்கள் அலட்டிக்கொள்ளப் போவதில்லை.

இங்குள்ள ஒரு சபையில் கூட நிராகரிக்கப்படாமல் 17 சபைகளிலும் சரியாக செயல்பட்டு தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றிருப்பதென்பதை இவர்களால் பொறுத்துக் கொள்ளவோ - சகித்துக் கொள்ளவோ முடியவில்லை. அதனாலேயே தேவையில்லாத விமர்சனங்களை செய்கின்றனர். எது எப்படியாயினும் எங்களுடைய வெற்றி உறுதியானது - என்றார். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
22.03.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 08

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மக்கள் கற்றுக்கொள்ள வேண்டியது!

பாராளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட தோல்வியும் தேசிய மக்கள் சக்தியின் அலை தொடர்பில் ஏற்பட்ட அச்ச மனோநிலையும் சில அரசியல் கூட்டுகளை கனியச் செய்திருக்கிறது. தேர்தல் காலங்களில் கூட்டணிகள் உருவாவதற்கும் அவ்வாறு உருவாகிய கூட்டணிகள் பின்னர் காணாமல் போவதற்கும் வாக்களிக்கும் மக்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை - மாறாக அனைத்தும் கட்சிகளின் அச்சத்திலிருந்தே நிகழ்கின்றன.

கடந்த பதினைந்து வருடங்களில் அரசியல் கூட்டணிகளுக்கான பல முயற்சிகள் இடம்பெற்றிருக்கின்றன. இதில், சில முயற்சிகள் முளையிலேயே கருகிப் போயின - சில முயற்சிகள் தேர்தல் முடியும் வரையில் நிலைத்து, பின்னர் சிதறிப் போயின. தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சி ஓர் அண்மைய உதாரணமாகும். பொது வேட்பாளர் முயற்சியில் ஒன்றுபட்ட கட்சிகள் இப்போது மூன்று அணிகளாகப் பிரிந்து உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்கின்றன. மக்களுக்கும் இவர்களின் அணிச் சேர்க்கைகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை இதன் மூலம் ஒருவர் புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து செயல்பட்ட இரண்டு சிறிய கட்சிகளும் ஒன்றிணைந்து உருவாக்கியிருக்கும் கூட்டணிதான் இதில் மிகவும் சுவாரசியமான கூட்டணியாகும். ஏனெனில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த காலத்தில் மற்றவர்கள்மீது மோசமான விமர்சனங்களை முன்வைத்திருக்கிறது - அவற்றை விமர்சனங்கள் என்றுகூடக் கூறமுடியாது - மாறாக மோசமான அரசியல் தாக்குதல்கள் என்றே கூற வேண்டும். அவ்வாறானவர்களுடன் இணையும் முடிவால் மாற்றங்களைப் புரிந்துகொள்ளும் பக்குவம் முன்னணிக்கு வந்திருந்தால் அதனை வரவேற்கத்தான் வேண்டும்.

ஆனால், இங்கு மக்கள் சிந்திக்க வேண்டிய விடயம் வேறு. அதாவது, தமிழ் அரசியல்வாதிகள், தங்களின் தேவைக்காகவே ஒவ்வொரு கால கட்டங்களில் துரோகி, தியாகி என்னும் சொற்களை பயன்படுத்துகின்றனர். அரசியல்வாதிகளின் ஆடு புலியாட்டத்தின்போது, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் துரோகிகள் என்போர் திடீர் தியாகிகளாகி விடுவதும் பின்னர் தியாகிகள் என்போர் திடீர் துரோகிகளாவதும் சர்வசாதாரணமானது. ஆனால், வாக்களிக்கும் மக்களோ எதுவும் புரியாமல் ஆட்டு மந்தைகள் போல் வாக்களிக்க வேண்டும். இந்த விடயத்தைத்தான் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியலில் துரோகிகள், தியாகிகள் என்னும் பிளவுகள் எப்போதுமே இருந்ததில்லை. இருந்தது ஒன்றுதான் இயக்கங்களுக்கு இடையிலான முரண்பாடு. இந்த முரண்பாட்டை மக்கள் மத்தியில் நியாயப்படுத்துவதற்கு தங்களை உத்தமர்களாகக் காண்பித்துக்கொள்ள வேண்டிய தேவை சிலருக்கு ஏற்பட்டபோது அவர்களுக்கு துரோகி, காட்டிக்கொடுப்பு, ஒட்டுக்குழு போன்ற சொற்கள் தேவைப்பட்டன. இப்போதும் தேவை ஏற்படும்போதெல்லாம் அரசியல்வாதிகளுக்கு இந்தச் சொற்கள் தேவைப்படுகின்றன.

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்னும் பெயரில் தங்களை அடையாளப்படுத்தியவர்களே இதனை அதிகம் பயன்படுத்தியவர்கள். ஆனால், இன்று தங்களால் தனித்து நிற்கமுடியாது - முக்கியமாக தேசிய மக்கள் சக்தியின் சவாலை தனித்து எதிர்கொள்ள முடியாது என்பதை உணர்ந்தபோது, கடந்த காலத்தில் எவரை தூற்றினார்களோ, அவர்களுடன் கூட்டணி அமைத்திருக்கின்றனர். துரோகி, தியாகி, தமிழ்த் தேசியத் தரப்பு, தேசிய விரோதத் தரப்பு - இப்படியான பிரிவுகள் அனைத்தும் வெறும் தேவை கருதிய அரசியல் புனைவுகளாகும். இதனைத்தான் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதனைப் புரிந்துகொண்டால் மக்கள் தெளிவாக வாக்களிக்க முடியும். மக்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது அவர்களின் சுதந்திரம். ஆனால், வாக்களிக்கும் போது போலித்தனங்களுக்கு அடிபணிந்து வாக்களிக்கக்கூடாது.

# சீன சொக்லேட்களை விற்பனைக்கு வைத்திருந்தவருக்கு ரூ. 64,000 அபராதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 22

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சீன சொக்லேட் வகைகளை விற்பனைக்கு வைத்திருந்த கடை உரிமையாளருக்கு 64 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட மானிப்பாய் பொது சுகாதார பரிசோதகர் கி. அஜந்தன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது அனுமதியற்ற வகையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, உரிய ஆவணங்களின்றி சீன சொக்லேட் வகைகளை விற்பனைக்கு வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

இந்த சொக்லேட் வகைகளை கைப்பற்றிய சுகாதார பரிசோதகர் அவற்றை சான்றுபொருட்களாக்கி கடை உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

நேற்று முன்தினம் நடந்த இந்த வழக்கில் கடை உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையை அடுத்து அவரை கடுமையாக எச்சரித்த நீதிவான் அவருக்கு 64 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)

# யாழ். ஜனாதிபதி மாளிகை மூலம் வருமானமீட்ட பயன்படுத்துங்கள்

## சத்தியலிங்கம் எம். பி.

கொழும்பு, மார்ச் 22

பல கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் ஜனாதிபதி மாளிகையை பொது மக்கள் பாவனைக்காகவும் தேசிய பொருளாதாரத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் பயன்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் - என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திகள் தொடர்பில் கடந்த அரசாங்கங்கள் அவதானம் செலுத்தவில்லை. பயனற்ற வகையிலான திட்டங்களுக்கு அதிக முதலீடுகள் செய்யப்பட்டன - என்றார். (ஐ)

# ஓய்வூதியத்தை எதிர்பார்த்திருந்த 2000இற்கும் மேற்பட்டோர் மரணம்!

## ரவிகரன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு நாட்டின் நிலைமை காரணமாக கோட்டாபய அமைச்சரவையால் ஓய்வூதிய கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால், ஓய்வூதியத்தை எதிர்பார்த்திருந்த 2000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை ஓய்வு பெற்றவர்களுக்கு 2020-01-01 இல் வழங்குவதற்குரிய ஓய்வூதியமானது நாட்டின் நிலமை காரணமாக கோட்டாபய அமைச்சரவையால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை ஓய்வு பெற்ற பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு - செலவு திட்டத்தில் இதற்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர்.

அதாவது 2020ஆம் கிடைக்கவேண்டிய ஓய்வூதிய கொடுப்பனவு 2025ஆம் ஆண்டுவரை, ஐந்தாண்டுகளாக பெறமுடியாது காத்திருந்தவர்களுக்கு தற்போது வரவு - செலவு திட்டத்தில் அந்தக் கொடுப்பனவு மூன்று கட்டங்களாக 2027வரை வழங்க காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளளது.

இக்கொடுப்பனவு பெற வேண்டிய 2000 பேரளவிலான ஓய்வூதியர்கள் இறந்துவிட்டனர். இந்நிலையில் தற்போதைய அரசும் ஓய்வூதியர் வாழ்வுக் காலம் பற்றி சிந்திக்காது, குறித்த ஓய்வூதிய கொடுப்பனவு வழங்குவதை மேலும் மூன்றாண்டுகளுக்கு பிற்போட்டுள்ளதென கவலையடைகின்றனர் மக்களுக்கான அரச பணியை பண்பாக செய்து, இன்று ஓய்வில் இருக்கும் சேவையாளர்களை நிம்மதியாக ஓய்வு காலத்தை கழிப்பதற்கு உதவி செய்யுங்கள். - என்றார்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய்முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.

**இடபம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**கடகம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

**கன்னி**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**துலாம்**
இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் புதுவாய்ப்புகள் வரும். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**தனுசு**
பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**
பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப்பீர்கள். அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள்.

**கும்பம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். சாதிக்கும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

# மருதடி விநாயகருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச்.22
வரலாற்றுச் சிறப்பு மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று 22 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

அந்த வகையில் சித்திரை புதுவருடப் பிறப்பு தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ)

# நான்கு சபைகளுக்கு 38 வேட்பு மனுக்கள் மன்னாரில் 8 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு



மன்னார், மார்ச்.22
மன்னார் மாவட்டத்தில் 4 உள்ளூராட்சி சபைகளுக்கு 38 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான க. கனகேஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், மன்னார் நகர சபை, நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்களாக நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு மன்னார் மாவட்டத்தில் வேட்பு மனுக்கள் கோரப்பட்டிருந்தன.

கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் நேற்று முன்தினம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை வரையான காலப்பகுதியில் சுயேச்சை குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் உள்ளடங்களாக 45 பேர் கட்டுப்பணம் செலுத்தினர்.

அவற்றில் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் உள்ளடங்களாக 38 பேருடைய வேட்பு மனுக்கள் எமக்கு கிடைக்கப் பெற்றிருந்தன.

மன்னார் நகர சபையில் 09 கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழு உள்ளடங்களாக 10 வேட்புமனுக்கள் கிடைக்கப்பெற்றன. முசலி பிரதேச சபைக்கு 09 கட்சிகளினதும், ஒரு சுயேச்சைக் குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றன.

நானாட்டான் பிரதேச சபைக்கு 07 கட்சியினதும் ஒரு சுயேச்சைக்குழு உள்ளடங்களாக 8 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றன. மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 9 கட்சியினதும் ஒரு சுயேச்சைக்குழு உள்ளடங்களாக 10 வேட்பு மனுக்கள் கிடைக்கப்பெற்றன.

முசலி பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 8 வேட்புமனுக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு, சிறிலங்கா தொழிலாளர் கட்சி, சர்வஜன அதிகாரம் ஆகிய நான்கு கட்சிகளினதும், சுயேச்சைக் குழு ஒன்று உள்ளடங்களாக 5 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

மன்னார் நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற 10 வேட்பு மனுக்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி, மற்றும் சுயேச்சைக் குழு உள்ளடங்களாக 2 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# தேசிய கல்வியியற் கல்லூரி குறித்து விசாரணை நடத்த குழு அமைப்பு

வவுனியா, மார்ச்.22
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பில் விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா கல்வியியற் கல்லூரி தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடு தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரி விக்கையில்,

வவுனியா கல்வியியற் கல்லூரியில் கல்வி கற்கும் ஆசிரிய மாணவர்கள் துன்புறுத்தப்படுவதாக பெற்றோர்கள் சிலரால் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பில் கல்வி அமைச்சிடம் விளக்கம் கோரியிருந்தோம். கல்வி அமைச்சால் கல்வியற் கல்லூரிகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற பிரதான ஆணையாளர் ஊடாக விசாரணை நடத்த மூவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணைகளின் பின்னர் அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-10)

# யாழில் விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச்.22
யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் காலை உயிரிழந்தார். யாழ்ப்பாணம் 2ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த இராஜலிங்கம் கேசவன் (வயது -48) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 13ஆம் திகதி காலை 08.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி செம்மணி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, அவ்வீதியால் வந்த இ.போ.ச. பேருந்து இவரை முந்திச் செல்ல முற்பட்டபோது மோதியது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குறித்த குடும்பஸ்தர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் காலை உயிரிழந்தார். மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (எ-05)

# குப்பை மேடாக மாறுகிறது வீதி

கிளிநொச்சி, மார்ச்.22
கிளிநொச்சி நீதிமன்றுக்கு அருகாமையில் உள்ள வீதி எந்தவித பராமரிப்பும் இன்றி குப்பை மேடாக மாறி வருகிறது.

குறித்த வீதியில் அதிகளவான கழிவுகள் மற்றும் மிருக எச்சங்கள் பிளாஸ்ரிக் பொருட்கள் ஆங்காங்கே குவிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

நீதிமன்றத்துக்கு வருபவர்கள் குறித்த வீதியை பிரதான மாக பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறு எந்தவித பராமரிப்பும் இல்லாமல் இருந்தால் குறுகிய காலத்தில் மிகப்பெரிய குப்பைமேடாக குறித்த வீதி மாறிவிடும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனில் ஹந்துன்நெத்தி-தயாசிறி பாராளுமன்றில் வாய்த் தர்க்கம்!

கொழும்பு, மார்ச் 22

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மற்றும் தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி இடையே நேற்றைய பாராளுமன்ற அமர்வில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது.**

தயாசிறி ஜயசேகர சபாநாயகருக்கு அறிவுறுத்தல் வழங்குவதாக அமைச்சர் ஹந்துன் நெத்தி குற்றம் சுமத்தியதைத் தொடர்ந்து இருவரிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

சபாநாயகருக்கு நான் அறிவுறுத்தவில்லை என தெரிவித்த தயாசிறி, எதிர்க்கட்சியில் இருந்தபோது விருப்பத் திற்கேற்றவாறு கேள்விகளை எழுப்பிய ஹந்துன்நெத்தி போன்றவர்கள், எதிர்க்கட்சியில் இருந்தபோது பாராளுமன்றத்தில் எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதை மறக்க முடியாது எனக் கூறினார்.

மூல கேள்வியை அடிப்படையாகக் கொண்டு துணை கேள்விகளை நேரடியாக கேட்குமாறு சபாநாயகர் தயாசிறிக்கு அறிவுறுத்தியதை அடுத்து இந்த பிரச்னை எழுந்தது. (அ)

## சட்டபூர்வமாக பதவி விலகாத 1,700 முப்படையினர் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 22

சட்டபூர்வமாக சேவையை இராஜினாமா செய்யாமல், பணிக்கு வருகை தராத முப்படைகளைச் சேர்ந்த சுமார் 1,700 பேர் ஒரு மாத காலப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டபூர்வமாக சேவையை இராஜினாமா செய்யாமல் சேவையிலிருந்து தப்பியோடிய முப்படை அதிகாரிகளைக் கைது செய்யும் நடவடிக்கை கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அதன்படி, பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையில், முப்படையினரால் 1531 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கைகளில் 165 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெப்ரவரி மாதத்தில் சேவையிலிருந்து தப்பியோடிய 75 முப்படையினரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் இம்மாதத்தில் கடந்த சில தினங்களில் 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## தீயணைப்பு வாகனங்களை வழங்க ஜப்பான் இணக்கம்!



கொழும்பு, மார்ச் 22

இலங்கையின் ஏற்றுமதியை ஆதரிப்பதற்காக 300 மில்லியன் ஜென் மதிப்புள்ள தீயணைப்பு வாகனங்களை வழங்குவதற்கு ஜப்பான் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பான் அரசாங்கம் 300 மில்லியன் ஜென் மதிப்புள்ள உயர்தரமான ஜப்பானிய தீயணைப்பு வாகனங்களை மானிய உதவியின் மூலம் வழங்க முடிவு செய்துள்ளது.

இது நாட்டின் ஏற்றுமதி செயல்மிகு மண்டலங்களில் பேரழிவுகளை எதிர்கொள்ளும் திறனை வலுப்படுத்தி, ஒரு பாதுகாப்பான வர்த்தக சூழலை உருவாக்குவதோடு பொருளாதார மற்றும் சமூக நிலைத்தன்மைக்கு உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் இந்த மானிய உதவியை தொடர்பாக ஜப்பான் தூதர் அகியோ இசோமாடா மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் துறைச் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டு புரிந்துணர்வு கடிதங்களை பரிமாறிக் கொண்டனர். (அ)

# அர்ச்சுனா குறித்த சபாநாயகரின் தீர்மானம் இன ரீதியானது அல்ல!

## அமைச்சர் உபாலி பன்னிலகே

கொழும்பு, மார்ச் 22

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்பில் சபாநாயகர் எடுத்த தீர்மானத்தை இன ரீதியாக பார்ப்பது முற்றிலும் தவறானது. தீவிரமான பரிசீலனைக்கு அமைவாகவே சபாநாயகர் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளார். இதற்கும், அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாதென கிராமப்புற மேம்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த பாராளுமன்றத்தில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், ஆர்.சம்பந்தன் ஆகிய சிரேஷ்ட அரசியல் தலைவர்கள் இருந்துள்ளார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களாகவும் பதவி வகித்துள்ளார்கள். தேசிய ரீதியான பிரச்னைகள் தோற்றம் பெறும்போது நடுநிலையாக இருந்தும் செயற்பட்டுள்ளார்கள். ஆகவே அவர்கள் மீது எமக்கு சிறந்த கௌரவம் உள்ளது.

பாராளுமன்றத்தில் தற்போது அங்கம் வகிக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் சக பிரதிநிதிகளிடம் இணக்கமாகவே செயற்படுகிறோம். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் செயற்பாடுகள் தொடர்பில் சபாநாயகர் அண்மையில் விசேட அறிவிப்பை சபையில் விடுத்திருந்தார். இவ்விடயம் தொடர்பில் எமது சிரேஷ்ட சக உறுப்பினராக எஸ். சிறிதரன் பல விடயங்களை குறிப்பிட்டார்.

எமது சக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது எமக்கு அதீத கௌரவம் உள்ளது. ஆகவே இந்த விடயத்தை இன ரீதியாக பார்க்க வேண்டாம் என்று தயவுடன் கேட்டுக் கொள்கிறோம். யார் தவறிழைத்தாலும் அதற்கான பிரதிபலனை பெற வேண்டும்.

குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பில் சபாநாயகர் தீவிரமாக ஆராய்ந்து, அவரது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களுக்கு அமைவாகவே தீர்மானம் எடுத்துள்ளார். இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிடவில்லை-என்றார். (அ)

# நாணய நிதிய நிபந்தனைப்படி வரி அறவீடு செய்தால் முதலீட்டாளர் வருகை குறையும்!

## ரவி கருணாநாயக்க சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 22

சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு அமைய நாட்டுக்குள் முதலீடு செய்பவர்களிடம் நூற்றுக்கு 15 சதவீதம் அறவிடுவது நியாயமில்லை. எதிர்காலத்தில் முதலீட்டாளர்கள் வருவது குறைந்துவிடும். அதனால் அரசாங்கம் அமைச்சரவைக்கு அவிவித்து இதில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும்.

இதன் மூலம் எதிர்பார்க்கும் 10 பில்லியன் ரூபாவை எரிபொருளுக்கு 25 சதம் வரி அறவிட்டு பெற்றுக்கொள்ளலானமென புதிய ஜனநாயக முன்னணி உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வங்குரோத்து அடைந்த இலங்கை இரண்டு வருடங்களில் மறுசீரமைக் கப்பட்டிருக்கிறது. இது மிகவும் முக்கியமாகும். இந்த மறுசீரமைப்பு தொடர்பில் உலக நாடுகள் எம்மை வியப்புடன் பார்த்து வருகின்றன. ஆனால் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை 2028ஆம் ஆண்டாகும்போது மீண்டும் கடன் செலுத்த வேண்டி இருக்கிறது. அதனை எவ்வாறு செய்யப் போகிறது என்பது தான் கேள்வியாக இருக்கிறது.

2028இல் இருந்து நாங்கள் 3பில்லியன் செலுத்த வேண்டி இருக்கிறது. அதேபோன்று 2028இல் இருந்து 2033 வரை நாங்கள் பெரிஸ் கிளப், இந்தியா, சீனா, ஜப்பான் நாடுகளுக்கு மேலும் 3 பில்லியன் செலுத்த வேண்டி இருக்கிறது. அதன் பின்னர் 2033இல் இருந்து மீண்டும் 9 பில்லியன் ரூபா கடன் செலுத்த ஆரம்பிக்கிறது.

அதனால் நாங்கள் 2028, 2033 வரை பார்த்துக்கொண்டிருக்காமல் கடனை அடைப்பதற்கு தேவையான பயணத்தை செல்வதற்கு தற்போது இருந்தே அந்த பயணத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக எமது பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டி இருக்கிறது.ஏற்றுமதிகளை அதிகரிக்க வேண்டி இருக்கிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்களை கொண்டுவர வேண்டி இருக்கிறது. எமது சுற்றுலா கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டி இருக்கிறது.

நாடு வங்குரோத்து அடைந்த பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின உதவியை பெற்றுக்கொள்வது அவசியமாகும். ஆனால் அவர்கள் தெரிவிக்கும் அனைத்துக்கும் தலையாட்ட தேவையில்லை. 16ஆது தடவை நாங்கள் சர்வ தேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடும்போது நான் அப்போது நாட்டின் நிதி அமைச்சராக இருந்தேன்.

அப்போது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேர்ந் தேன். அந்த சவால்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டு, எமது நிலைப்பாட்டை அவர் களுக்கு தெரிவிக்க எங்களுக்கு முடியுமாக இருந்தது-என்றார். (அ)

## வாகன விபத்துகளில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச்

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிட்டம்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்டி - கொழும்பு பிரதான வீதியில் கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 64 வயதுடைய ரதாவடுன்ன பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

இதேவேளை, மஹியங்கனை பொலிஸ் பிரிவின் பதியத்த லாவ மஹியங்கனை வீதி - ஒரு பெதிவெவ பகுதியில், பதியத் தலாவயிலிருந்து மஹியங்கனை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், மற்றுமொரு வாக னத்தை முந்திச் செல்ல முற் பட்ட போது, எதிர்த்திசையில் வந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.உயிரிழந்தவர் அராவத்த, மஹியங்கனை பகுதியைச் சேர்ந்த 35 வயது டையவராவார். (அ)

## 180 சுற்றுலாப் பயணிகளுடன் கொழும்பு வந்தடைந்த பல்கேரியா எயார் விமானம்

கொழும்பு, மார்ச் 22

பல்கேரியா எயார் விமானம் 180 சுற்றுலாப் பயணிகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க அளவை குறிக்கும் வகையில், இந்த விமானம் காலை 06:30 மணிக்கு தரையிறங்கியது.

நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த முயற்சி அமைந்துள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை உள்ளூர் பொருளாதாரத்திற்கு சாதகமான விளைவை ஏற்படுத்தும் என்பதுடன் சுற்றுலா மேற்கொள்வதற்கு இலங்கை சிறந்த இடம் என்ற நற்பெயரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு செல்லும் வழி தவறானது மக்கள் சமிக்ஞை காண்பிப்பர்

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 22

**அரசாங்கம் செல்லும் வழி தவறானது என்பதற்கான சமிஞ்ஞையை இந்த தேர்தலில் மக்கள் காண்பிப்பார்கள். இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் எமது வெற்றியை உறுதிப்படுத்துவர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

கொழும்பு மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-நாடளாவிய ரீதியில் சகல உள்ளூராட்சிமன்றங்களிலும் வேட்புமனு தாக்கல் செய்திருக்கின்றோம். எதிர்வரும் ஒன்றரை மாதங்களுக்கு தேர்தல் பணிகளை திட்டமிட்டிருக்கின்றோம்.

அரசாங்கம் செல்லும் வழி தவறானது என்பதற்கான சமிஞ்ஞையை இந்த தேர்தலில் மக்கள் காண்பிப்பார்கள். கடந்த தேர்தல்களில் வாக்களிக்காதவர்கள் இம்முறை ஐக்கிய மக்கள் சக்திக்கு வாக்களித்து எமது வெற்றியை உறுதிப்படுத்துவர் என்று நம்புகின்றோம்.

தவிசாளர் இம்தியாஸ் பாகீர் மாக்காரின் இராஜிநாமா கடிதத்தை கட்சி தலைவர் நிராகரித்துள்ளார்.

அவருடன் கலந்தாலோசித்து கட்சி என்ற ரீதியில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அரசாங்கம் தவறான முடிவுகளை எடுக்கும் போது எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் எமது கடமைகளை நாம் சிறப்பாக நிறைவேற்றுவோம். கடந்த காலங்களைப் போன்று இம்முறையும் கொழும்பில் பாரிய வெற்றியைப் பதிவு செய்வோம்-என்றார். (அ)

# சமூகத்தின் அனைத்துத் தரப்பும் இந்த பாதீட்டின் ஊடாக மகிழ்ச்சி

## சபையில் கூறினார் பிரதமர்



கொழும்பு, மார்ச் 22

கடந்த அரசாங்கங்கள் வழங்கிய நன்மைகளை முறைகேடாகப் பெற்றுக் கொண்டவர்களைத் தவிர சமூகத்தின் அனைத்து தரப்பினரும் இந்த பாதீட்டின் ஊடாக மகிழ்ச்சியடைந்துள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாதீடு தொடர்பான நிதி அமைச்சின் செலவீன தலைப்பு தொடர்பான குழுநிலை விவாதத்தின் போது பிரதமர் இதனைக் குறிப்பிட்டார். விமர்சனம் பாதீட்டை மேலும் வலிமையாக்குவதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

பாதீட்டின் முதல் நாளில் எதிர்க்கட்சிகள் ஆற்றிய உரைகளிலும், ஒரு மாத விவாதத்திற்குப் பிறகு இன்று ஆற்றிய உரைகளிலும் ஏதேனும் முன்னேற்றம் உள்ளதா என தான் கவனித்துப் பார்த்ததாகச் சுட்டிக்காட்டிய பிரதமர்,

ஆனால் எதிர்க்கட்சிகளின் உரைகள் ஒரே புள்ளியில் இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது எனத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் தெரிவிப்பதையே தாம் அவதானித்ததாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

இந்த பாதீடு தொடர்பான விவாதங்களின் போது, தேசிய மக்கள் சக்திகள் ஆரம்பித்த சிஸ்டம் சேன்ஞ் ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (அ)

# கொள்ளுப்பிட்டி வாகன விபத்து; லொஹான் ரத்வத்த விடுதலை

கொழும்பு, மார்ச் 22

கொள்ளுப்பிட்டிச் சந்தியில் வாகன விபத்தை ஏற்படுத்தி பின்னர், சட்டத்தரணி மற்றும் அவரது கனிஷ்ட சட்டத்தரணியை தூற்றி மரண அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்த அந்த குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் கொழும்பு - கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் சட்டத்தரணி நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கை மீதான ஆராய்வின் போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 10 இலட்சம் ரூபாவைச் செலுத்த இணக்கம் காணப்பட்டதாகவும் லொஹான் ரத்வத்தவின் சட்டத்தரணி நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதவான், கொள்ளுப்பிட்டி வாகன விபத்து வழக்கிலிருந்து லொஹான் ரத்வத்தவை விடுவிக்கும் உத்தரவை பிறப்பித்துள்ளார். (அ)

# இந்து சமுத்திர வலயத்துக்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்புக்குப் பாராட்டு!

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் ஐக்கிய அமெரிக்க இந்து-பசுபிக் கட்டளையின் கட்டளை அதிகாரி அட்மிரல் செமுவேல் பபாரோ ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு பாராட்டு தெரிவித்த அதேநேரம், இந்து சமுத்திர வலயத்தை பாதுகாத்து அமைதியான இந்து சமுத்திர வலயத்தை பேணுவதற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்பையும் அட்மிரல் பபாரோ பாராட்டினார்.

அத்துடன் இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கு இடையில் காணப்படும் வலுவான தொடர்புகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவும், இலங்கை அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்கிக் கொள்ளவும் தனது ஒத்துழைப்பை வழங்குவதாக அட்மிரல் பபாரோ தெரிவித்தார்.



இலங்கையின் பாதுகாப்புத் துறையின் மனித வள அபிவிருத்திக்கு ஐக்கிய அமெரிக்காவினால் ஆரம்ப காலத்திலிருந்து இதுவரையில் வழங்கப்பட்டுவரும் ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதன்போது நன்றி தெரிவித்தார்.

இதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், லெப்டினன்ட் கேணல் அன்டனி நெல்சன், ஐக்கிய அமெரிக்க இந்து -பசுபிக் கட்டளையின் சிரேஷ்ட வெளிநாட்டு கொள்கை ஆலோசகர் டேவிட் ரென்ஸ் உள்ளிட்டவர்கள் இதில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒரு வயது குழந்தைக்கு அளவுக்கு அதிகமாக மருந்து கொடுத்த இராணுவ அதிகாரி கைது!

கொழும்பு, மார்ச் 22

தனது சட்டவிரோத மனைவியின் ஒரு வயது குழந்தைக்கு அளவுக்கு அதிகமாக மருந்தைக் கொடுத்ததாகக் கூறப்படும் இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர், குருநாகல் - ரிதீகம பகுதியில் உள்ள தனது சட்டவிரோத மனைவியின் வீட்டுக்குச் சென்ற போது அவருடைய குழந்தைக்கு அளவுக்கு அதிகமாக மருந்தை கொடுத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அக்குழந்தைக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதுடன், குழந்தை சிகிச்சைக்காக ரிதீகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் தாயாரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டதை தொடர்ந்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட நபர் வெலிகந்த பகுதியை சேர்ந்த 22 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித் துள்ளனர். (அ)

# ஏ.ரி.எம். இயந்திரத்தை சேதமாக்கிய இளைஞன்!

கொழும்பு, மார்ச் 22

அரச வங்கியின் தன்னியக்க இயந்திரத்தை தாக்கி சேதப்படுத்தியதாகக் கூறப்படும் பிபில பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞனை, முறைப்பாட்டாளர் தரப்பான வங்கிக்கு 224,750 ரூபாயை செலுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டார்.

கொழும்பில் உள்ள ஒரு கட்டுமான இடத்தில் பணிபுரியும் பிபில பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர், போதைப் பொருள் உட்கொண்ட பின்னர் அரச வங்கி தன்னியக்க இயந்திரத்தை தாக்கி சேதப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு நகர சபைக்கு அண்மையிலுள்ள வங்கிக் கிளையின் முகாமையாளர் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக கறுவாத் தோட்ட பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பொலிஸ் பேச்சாளர் இராஜினாமா!

கொழும்பு, மார்ச் 22

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க, பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

அதற்கமைய, அவர் தனது பதவி விலகல் கடிதத்தை பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனது தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் இந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி இலங்கை பொலிஸ் ஊடகப் பிரிவின் பணிப்பாளராகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளராகவும் அவர் தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சதொசவில் ஊழல்!

## முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 22

கடந்த நாட்களில் சதொச விற்பனை நிலையங்கள் மூலம் 11,500 கிலோ தரமற்ற அரிசியை விற்பனை செய்ததன் மூலம் பெரும் ஊழல் நடந்துள்ளதாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கூட்டுறவு, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செலவினத் தலைப்பு மீதான வரவு -செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே முஜிபுர் ரஹ்மான் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சதொசவில் விலைமனுக் கோரல் ஆவணங்கள் காணாமல் போயுள்ளன.



அவை ஜனாதிபதியின் ஆலோசகரான துமிந்த ஹுலங்கமுவவின் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அசல் விலைமனுக் கோரல் ஆவணங்கள் காணாமல் போனமை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

சதோச இன்று திருடர்களின் கூடாரமாக மாறிவிட்டது- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.மனித உரிமை பேரவையிலிருந்து இலங்கை உடன் வெளியேறவேண்டும்!

## முன்னாள் ஜனாதிபதி ரணில் கருத்து

கொழும்பு, மார்ச் 22

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலிருந்து இலங்கை வெளியேறவேண்டும் என தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய கிளை குறித்து விசாரணைகளை கோர வேண்டும் என தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதி தருணங்களில் 40,000 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ள அவர், நல்லாட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றி விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டார். அந்த உடன்படிக்கையை நாங்கள் மதிக்கவேண்டும் என்பதே எனது கருத்து.

காணாமல்போனவர்கள் உட்பட பல விடயங்களுக்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் ஆரம்பித்தோம். அவை மிகவும் மெதுவாகத்தான் செயற்பட்டன. ஆனாலும் நாங்கள் ஆரம்பித்தோம்.

இப்போது எஞ்சியிருக்கின்ற விடயம் விசாரணைகள் தொடர்பானது. இந்தியா உட்பட பல நாடுகள் இதனை இலங்கை நீதிபதிகளே முன்னெடுக்கவேண்டும் என விரும்புகின்றன. ஆனால் நாங்கள் கண்காணிப்பாளர்களை ஏற்க தயார் எனத் தெரிவித்தோம்.

நாங்கள்,மைத்திரிபால



சிறிசேன அரசாங்கத்தின்போது ஆணைக்குழு தொடர்பான புதிய நகல் வடிவமொன்றை உருவாக்கினோம். ஜப்பான், தென்கொரியாவின் உதவியுடன் புதியதொன்றை உருவாக்கினோம். இதுவே உண்மை நல்லிணக்க ஆணைக்குழு. அதனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டும். செயற்பட ஆரம்பிக்கவேண்டும்.இந்த ஆணைக்குழு அனைத்து தேவைகளையும் நிறைவேற்றும். விசாரணைகளை இந்த ஆணைக்குழு முன்னெடுக்கலாம். அதன் பின்னர் அடுத்த கட்டம் குறித்து சட்டமா அதிபர் தீர்மானிப்பார்.

பிரான்சிஸ் ஹரிசனிடம் நான் கேள்வி எழுப்பியவேளை அவர் தான் 40,000 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கவில்லை என்றார். இதன் காரணமாக நாங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். ஜனநாயகத்தை நீண்ட கால மாக பின்பற்றி வரும் ஜனநாயக நாடு இலங்கை என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண் டும்.

நாங்கள் யுத்தத்தை எதிர்கொண்டோம். நாங்கள் தேர்தல்களை நடத்தினோம். நாங்கள் எங்கள் தலைவர்கள் சிலரை இழந்தோம். சில வேட்பாளர்களை இழந்தோம். 1988 முதல் நாங்கள் அனைத்து தேர்தல்களையும் நடத்தியுள்ளோம் அதற்கு நீங்கள் எங்களை பாராட்டவேண்டும்.

எங்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியவர்கள் தமிழர்களாக, ஜே.வி.பியாக இருக்கலாம். அவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கின்றனர், அரசாங்கத்தில் உள்ளனர். ஜனாதிபதியாக உள்ளனர். வேறு எந்த நாட்டினால் இவ்வாறானதொரு வரலாறு குறித்து பெருமிதம் கொள்ள முடியும்.

நாங்கள் வழங்கிய எந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற வேண்டும். தமிழ் மக்கள் தங்களுக்கு நீதி கிடைத்ததாக உணரும் நிலையேற்படவேண்டும்.

ஆனால் அதேவேளை மனித உரிமை பேரவையிலிருந்து வெளியேறுங்கள் என நான் தெரிவிப்பேன்.அதற்கான நேரம் இதுதான். ட்ரம்ப் வெளியேறிவிட்டார். நீங்கள் உங்களால் முடியாது என்கின்றீர்கள். இல்லாவிட்டால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய கிளை குறித்து விசாரணையை நாங்கள் கோரவேண்டும்.

அதனை நிறைவேற்றாவிட்டால் நாங்கள் நெருக்கடியான நிலையை சந்திப்போம். அனைத்து கட்சிகளும் இணைந்து எங்களின் காலத்தில் உருவாக்கப்பட்ட உண்மை நல் லிணக்க ஆணைக்குழு குறித்த யோசனையை பாராளுமன்றத் தில் சமர்பித்து நிறைவேற்ற வேண்டும். நான் அதற்கு ஆதரவை வழங்குவேன்-என்றார். (அ)

# கிராண்ட்பாஸ் துப்பாக்கிச்சூடு பெண்ணொருவர் கைதானார்!

கொழும்பு, மார்ச் 22

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகலகம் வீதி பிரதேசத்தில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 24 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், மேலும் இருவரை குறிவைத்து துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தக் குற்றத்துக்கு உதவியதாக ராஜகிரிய பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகள் குழுவினால் கடந்த 18 ஆம் திகதி அன்று சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், இந்தக் குற்றச் செயல்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் சந்தேக நபரின் மனைவி நேற்று முன் தினம் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 24 வயதுடைய வெல்லம்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவராவார் ஆவார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரேண்ட்பாஸ் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)

# ரணில் சபைக்கு வந்தால் அரச எம்.பிக்கள் பதறுவர்!

## கூறுகிறார் மனுஷ நாணயக்கார



கொழும்பு, மார்ச் 22

" தாத்தா (ரணில்) பாராளுமன்றம் வந்து ஒரு உரையாற்றினால் தேசிய மக்கள் சக்தியின் 159 பேரும் ஆட்டம் கண்டுவிடுவார்கள். அதனால்தான் ரணில் விக்கிரமசிங்க தற்போது குறிவைக்கப்பட்டுள்ளார்." என்று முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேசிய மக்கள் சக்தியினர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை விமர்சிப்பதில்லை. ரணில் விக்கிரமசிங்கவை குறிவைத்துதான் தாக்கி வருகின்றனர். அவரது வெளிநாட்டுப் பயணம் பற்றிக்கூட பேசுகின்றனர். தற்போது பட்டலந்த அறிக்கை கையிலெடுக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் ரணில் விக்கிரமசிங்கதான் தற்போதைய அரசுக்கு பெரும் சவாலாகும். அவர் பாராளுமன்றம் சென்று ஒரு உரையாற்றினால் தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் ஆட்டம் கண்டுவிடுவார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவால் தான் இந்நாட்டை மீட்க முடியும். ரணிலை தாத்தா என விமர்சிக்கின்றனர். ஆனால் அந்த தாத்தாவைதான் தற் போது குறிவைத்துள்ளனர்-என் றார். (அ)

# பலூன் தொண்டையில் சிக்கி 11 வயது சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 22

காலி - நெலுவ பகுதியில் பலூன் துண்டு ஒன்று தொண் டையில் சிக்கியதால் 11 வயதுடைய சிறுவன் உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

பெற்றோர் வீட்டில் இருந்த போது, குறித்த சிறுவன் பலூனை வைத்து விளையாடிக் கொண்டிருந்ததாகவும் , இதன்போது பலூன் வெடித்து அதில் ஒரு துண்டு சிறுவனின் தொண்டையில் சிக்கியுள்ளதாக் கூறப்படுகிறது.இதன் காரணமாக குறித்த சிறுவன் நெலுவ - மெதகம வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்ட பின்னர் உயிரிழந் துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பள்ளத்தில் கவிழ்ந்தது லொறி

கொழும்பு, மார்ச் 22

கண்டி - மாத்தளை ஏ-9 வீதியில் நேற்று காலை மணல் ஏற்றிச்சென்ற லொறி ஒன்று 60 அடி ஆழ மான பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது . இவ்விபத்தில் லொறியின் சாரதி காயமடைந்து மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டியிலிருந்து கட்டுகஸ்தோட்டை நோக்கி பயணித்து கொண்டிருந்த லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சாரதிக்கு தூக்க கலக்கம் ஏற்பட்டதன் காரணமாகவே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 50 வீதமானவர்களே நாள் ஒன்றில் 2 தடவைகள் பல் துலக்குகின்றனர்

கொழும்பு, மார்ச் 22

நாட்டின் சனத்தொகையில் 50 வீதமானவர்களே நாள் ஒன் றில் இரண்டு தடவைகள் பல்துலக்குவதாக இலங்கை பல் வைத்திய சங்கம் தெரிவித்துள் ளது.

இலங்கை பல் வைத்திய சங்கத்தின் பிரதிச் செயலாளர் வைத்தியர் நிலந்த ரத்னாயக்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வருடம் ஒன்றில் சுமார் மூவாயிரம் பேர் வாய்ப்புற்று நோயால் பாதிக்கப்படுகின்றனர். வாய்ப்புற்று நோய் காரணமாக நாள் ஒன்றில் மூன்று பேர் மரணிக்கின்றனர்.

வாய் சுகாதாரம் தொடர்பில் பொதுமக்கள் அக்கறையின்றி செயற்படுகின் றனர்.

இதன் காரணமாக வாய் சார்ந்த நோய்கள் அதிகளவில் ஏற்படுகின்றன. எனவே, நாள் ஒன்றில் இரண்டு தடவைகள் பல்துலக்கும் முறைமையை கடைப்பிடிக்கவேண்டும்-என்றார். (அ)

# தும்பர சிறையில் தேசபந்து!

கொழும்பு, மார்ச் 22

வெலிகம துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தும்பர சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதவான் அருண புத்ததாச நேற்று முன் தினம் உத்தரவிட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினர் தொடர்பிலும் உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார். (அ)

# வெலிகம துப்பாக்கிச் சூடு 6 பேர் நீதிமன்றில் சரண்

கொழும்பு, மார்ச் 22

2023 ஆம் ஆண்டு வெலிகம - பெலேன பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றிற்கு அருகே நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக ஆறு சந்தேக நபர்கள் நேற்று மாத் தறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்ன கோன் உட்பட எட்டு பேரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது. வெலிகம - பெலேன பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றிற்கு அருகே 2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக் கிச் சூட்டுச் சம்பவம் தொடர் பில் கடந்த 4 ஆம் திகதி வெலி கம தலைமையக பதில் பொலிஸ் பரிசோதகர் உபுல் குமார, நீதி மன்றில் சரணடைந்திருந்தார்.

பின்னராக நேற்று முன் தினம் பிடியாணை பிறப்பிக் கப்பட்டிருந்த முனாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் சரணடைந்தார். இந்த நிலையில் ஏனைய ஆறு பேரும் நேற்று சரணடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பில் 12 உள்ளூராட்சி சபைகளுக்கு**

# 118 வேட்பு மனுக்கள் தாக்கல் 17 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

மட்டக்களப்பு, மார்ச்.22

**மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி சபைகளுக்கு 139 பேர் கட்டுப்பணம் செலுத்தியதுடன் 118 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில், 17 வேட்பு மனுக்கள் நிரா கரிக்கப்பட்டன. 101 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்று மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம். பி. எம். சுபியான் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு பழைய கச்சேரி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1 மாநகர சபை, 2 நகர சபை, 9 பிரதேச சபை உட்பட 12 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. கோறளைப்பற்று வடக்கு சபையில் சர்வஜன அதிகாரம் மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடைய வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் பற்று பிரதேச சபையில் விநாயகமூர்த்தி விஜயராஜா தலைமையிலான சுயேச்சைக் குழு மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அப்துல்லாப் முகமட் ஊஸைனின் என்பவருடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏறாவூர் நகர சபையில் 10 அரசியல் கட்சிகள் மற்றும் ஒரு சுயேச்சைக்குழு தாக்கல் செய்த 11 வேட்புமனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு 7 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக்குழுவுமாக 9 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் போரதீவுபற்று பிரதேச சபையில் 5 கட்சிகள் வேட்புமனு தாக்கல் செய்தன. இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சிவநேசராசா ஒளிர்வளசுதன் மற்றும் அரசரத்தினம் சப்த தவதீஸ் ஆகியோரது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபைக்கு 9 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழு உட்பட 10 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் , சிறீலங்கா தொழிலாளர் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி ஆகிய கட்சிகளுடைய வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் கருணாநிதி தர்சிகா என்பவருடைய வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மண்முனைபற்று பிரதேச சபைக்கு 11 கட்சிகளும் 7 சுயேச்சைக் குழுக்களுமாக 18 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சோமசுந்தரம் மகேந்திரன் தலைமையிலான சுயேச்சைக்குழு, கிருஸ்ணபிள்ளை கியானர் மற்றும் செல்லத்துரை தங்கவேல் தலைமையிலான சுயேச்சைக் குழு மற்றம் சிறீலங்கா தொழிலாளர் கட்சிகளின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கு 10 கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழு உட்பட 11 வேட்புமனுக்கள் தாக்கல் செய்தன. இதில் அனைத்து வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

காத்தான்குடி நகரசபையில் 7 அரசியல் கட்சிகளும் 3 சுயேச்சைக்குழுக்கள் உட்பட 10 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதில் சர்வஜன அதிகாரம் கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதுடன் மண்முனை மேற்கு பிரதேச சபைக்கு 7 அரசியல்கட்சிகள் வேட்புமனு தாக்கல் செய்தன. அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் மண்முனை தென் மேற்கு பிரதேச சபைக்கு 5 கட்சிகளும் ஒரு சுயேச்சைக்குழு உட்பட 6 வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டன. இதில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மொத்தமாக 4 இலட்சத்து 55 ஆயிரத்து 520 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் 444 வாக்களிப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளதுடன் 144 வட்டாரங்களிலிருந்து 146 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி சபைகளிலிருந்து மொத்தமாக 274 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்- என்றார்.(எ)

# மாட்டிறைச்சி விலையை குறைக்க தேர்தலில் போட்டியிடுகின்றோம்

## சுயேச்சை குழுத்தலைவர் சமீம்



கல்முனை, மார்ச்.22

மாட்டிறைச்சியின் விலையை 1700 ரூபாயாக குறைக்க தேர்தலில் சுயேச்சைக் குழு சார்பாக போட்டியிட தீர்மானித்துள்ளோம் என சட்டத்தரணி கே. எல். சமீம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச சபைக்கான வேட்புமனுவை நேற்று முன்தினம் தாக்கல் செய்த பின்னர் அம்பாறை மாவட்ட செயலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# திருகோணமலை மாவட்டத்தில் 26 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

திருகோணமலை, மார்ச்.22

எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கையளிக்கும் காலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் 12 மணியுடன் நிறைவடைந்த நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்காக 126 அரசியல் கட்சிகளும், 12 சுயேச்சைக் குழுக்களும் தமது வேட்பு மனுக்களை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் கையளித்தன.

இதில், 23 அரசியல் கட்சிகளினதும், 03 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 103 அரசியல் கட்சிகளினதும், 03 சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமான ஹேமந்த குமார தெரிவித்தார்.

திருகோணமலை மாநகர சபை, கிண்ணியா நகரசபை உள்ளிட்ட 13 உள்ளூராட்சி மன்றங்களுக்கான 129 வட்டாரங்களில் 136 பேர் வட்டார ரீதியாகவும் 123 பேர் விகிதாசார அடிப்படையிலும் மொத்தமாக 259 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதற்காக 103 அரசியல் கட்சிகளும், 03 சுயேச் சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளன. (எ)

# சுகாதார பரிசோதகர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படும்

## கிழக்கு ஆளுநர் உறுதி



திருகோணமலை, மார்ச்.22

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்படும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகரவுக்கும் இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில், ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் யூ. ஜி. திஸநாயக்க, மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஜி.எம். கொஸ்தா, இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கங்கத்தின் தேசிய அமைப்பாளர் உபுல் ரோஹண மற்றும் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்க பிரதிநிதிகள் ஆளுநரிடம் முன்வைத்ததுடன் இப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்தார். (எ)

# தெஹியத்தகண்டிய பிரதேச சபைக்கு 25 - 27 வரை வேட்புமனு தாக்கல்

காரைதீவு, மார்ச்.22

அம்பாறை மாவட்டத்தில் நீதிமன்றச் செயல்பாடு காரணமாக விடுபட்டிருந்த தெஹியத்தகண்டிய பிரதேச சபைக்கான வேட்புமனுத் தாக்கல் எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்று அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமான வேட்புமனுத் தாக்கல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வரை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இம்மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 04 மற்றும் உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை 20ஆகும்.

ஆனால் , கல்முனை மாநகர சபை மற்றும் தெஹித்தக்கண்டிய பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நீதிமன்ற காரணங்களால் தற்போது நடைபெற மாட்டாது. ஏனைய 18 சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என ஏலவே அறிவிக்கப்பட்டிருந்தது.இருப்பினும் தற்போது தெஹியத்தகண்டிய பிரதேச சபைக்கான தேர்தல் நீதிமன்ற விடுவிப்பு காரணமாக, ஏனைய 18 சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் அதே தினத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.(எ-07)



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் கலாசார திணைக்களம், கிண்ணியா பிரதேச செயலகம் ஆகிய வற்றின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் இப் தார் நிகழ்வு திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவின்மீது இஸ்ரேல் அடுத்தடுத்து தாக்குதல்!

## குழந்தைகள் உட்பட 85 பலஸ்தீனர்கள் பலி மூன்று நாட்களில் 592 பேர் கொன்று குவிப்பு


காஸா, மார்ச்.22

**காஸாமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குழந்தைகள், பெண்கள் உட்பட 85 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். இதேவேளை, கடந்த 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான மூன்று நாட்களில் மட்டும் 592 பேர் பலியாகினர்.**

காஸாவுக்கு எதிரான முதல் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நீட்டிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படாத சூழலில், காஸா பகுதியில் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், காஸாவில் கடந்த 18ஆம் திகதி இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 400இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதனிடையே நேற்று முன்தினம் இரவு காஸாவில் இஸ்ரேல் இராணுவம் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் சுமார் 85 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில், பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதாரத்துறை அதிகாரி ஜாகர் அல்-வாகீதி கூறுகையில், கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் நேற்று முன்தினம் இரவு வரை இஸ்ரேல் நடத்திய குண்டுவீச்சு தாக்குதல்களில் மொத்தம் 592 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (எ)



# ஹுசைனின் ஓவியம் ரூ. 408 கோடிக்கு ஏலம்

நியூயோர்க், மார்ச்.22

“இந்தியாவின் பிகாசோ” என அழைக்கப்படும் உலகப் புகழ்பெற்ற ஓவியர் எம். எவ். ஹுசைன் கடந்த 1954ஆம் ஆண்டு வரைந்த “கிராம யாத்திரை” என்கிற ஓவியம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த 19 ஆம் திகதி ஏலம் விடப்பட்டது. சுதந்திர இந்தியாவின் பன்முகத்தன்மை மற்றும் சுறுசுறுப்பை கொண்டாடும் ஹுசைனின் படைப்பாக கருதப்படும் இந்த ஓவியம் 13. 8 மில்லியன் டொலருக்கு (இலங்கை மதிப்பில் 408 கோடி ரூபாய்) ஏலம் போனது. ஏலத்தை நடத்திய தனியார் நிறுவனம் இது தொடர்பில் வெளியிட்ட அறிக்கையில், “ஹுசைனின் படைப்புக்கு மிகப் பெரிய மதிப்பை உருவாக்குவதில் ஒரு பகுதியாக இருந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது ஒரு முக்கியமான தருணம். நவீன மற்றும் சமகால தெற்காசிய கலை சந்தையின் அசாதாரணமான வளர்ச்சியை இது குறிக்கிறது”- என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சத்தீஸ்கரில் 30 நக்சல்கள் சுட்டுக்கொலை!

ராய்ப்பூர், மார்ச். 22

இந்தியாவின் சத்தீஸ்கரின் பஸ்தார் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இருவேறு சம்பவங்களில் 30 நக்சலைட்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கை படையினருக்கு கிடைத்த மற்றொரு வெற்றி என உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார். இன்னும் ஓராண்டில் இந்தியா, நக்சலைட்கள் இல்லாத நாடாக மாறும் என்றும் அவர் உறுதிபடக் கூறினார்.

இந்தியாவில் நச்சலைட் ஆதிக்கம் மிகுந்த மாநிலங்களில் ஒன்றாக சத்தீஸ்கர் உள்ளது. இம்மாநிலத்தில் நக்சலைட் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். நக்சலைட்களுக்கு எதிரான இந்த தேடுதல் நடவடிக்கையின்போது, அவ்வப்போது படையினருக்கும் நக்சலைட்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சத்தீஸ்கரின் பீஜப்பூர் மாவட்டம், கங்கலூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வனப் பகுதியில் நேற்று முன்தினம் காலை நக்சலைட்களை தேடும் பணியில் படையினர் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, 30 நக்சல்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். (எ)


## “சுனிதா, வில்மோர் வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்படுவர்”

வாஷிங்டன், மார்ச்.22

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர், உடல்நலம் சரியானதும் வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்படுவார்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

விண்வெளி நிலையத்தில் 286 நாட்கள் தவித்து வந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் கடந்த 19 ஆம் திகதி பூமிக்கு திரும்பினர். புவியீர்ப்பு விசை, சூழல் மாறுபாடு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், அவர்களின் உடல்நிலை பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். இதனால், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் 45 நாட்கள் தொடர் கண்காணிப்பில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். இருவரும் நலமுடன் இருப்பதாக நாசா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வாஷிங்டனில் நேற்று முன்தினம் தனியார் ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த ட்ரம்ப், “சுனிதா வில்லியம்ஸின் உடல்நிலை, பூமிக்கு ஏற்ற இயல்புக்குத் திரும்ப சில காலமாகும். சுனிதா மற்றும் வில்மோர் உடல்நலம் அடைந்த பிறகு வெள்ளை மாளிகைக்கு அழைக்கப்படுவார்கள்”- என்றார். (எ)



# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை!

பியோங்யாங், மார்ச்.22

வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா, தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென்கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது.

மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில், வடகொரியா நேற்று மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. எதிரி நாட்டுப் போர் விமானங்களைத் தாக்கி அழிக்கும் புதிய ஏவுகணை சோதனை நடத்தப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, தென்கொரியா இணைந்து போர் பயிற்சியில் ஈடுபட்ட நிலையில் அதற்கு பதிலடியாக இந்த ஏவுகணை சோதனை நடத்தப்பட்டுள்ளது. (எ)

# மத்திய கல்வித்துறை கலைப்பு மாகாணங்களுக்கு அதிகாரம்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடி



வாஷிங்டன், மார்ச்.22

அமெரிக்க அரசின் மத்திய கல்வித்துறையை கலைக்கும் உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று கையெழுத்திட்டுள்ளார். இதன் மூலம், கல்வித் துறையின் முழு அதிகாரமும் இனி மாகாணங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த உத்தரவு அமெரிக்காவின் கூட்டாட்சி கல்வித் துறையை நிரந்தரமாக நீக்கும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 1979ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மத்திய கல்வித்துறையை, காங்கிரஸின் ஒப்புதல் இல்லாமல் கலைக்க முடியாது. ஆனால், ட்ரம்ப்பின் உத்தரவு, கல்வித்துறைக்கான நிதி மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறையை ஏற்படுத்தும்.

கல்வித்துறையை மூடுவதற்கும், கல்வி அதிகாரத்தை மாகாணங்களிடம் திருப்பி வழங்குவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கல்வித்துறை செயலாளர் லிண்டா மெக்மஹோனை வலியுறுத்தும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ)

25 நாட்களுக்குப் பிறகு

# பாகிஸ்தான் - ஆப்கான் ரோர்காம் எல்லை திறப்பு

இஸ்லாமாபாத், மார்ச்.22

பாகிஸ்தான் -ஆப்கானிஸ்தான் இடையே ரோர்காம் எல்லை மீண்டும் திறக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் உள்ள ரோர்காம் இரு நாடுகளை கடக்கும் முக்கிய வழித்தடமாகும். இதன் வழியாக நாள்தோறும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர். மேலும், இந்த வழித்தடத்தில் தினமும் இலங்கை மதிப்பில் சுமார் 100 கோடி ரூபாய் அளவுக்கு வர்த்தகம் நடைபெறுகிறது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த பகுதியில் ஆப்கானிஸ்தான் இராணுவம் சோதனைச்சாவடி அமைக்க முயன்றது.

ஆனால், தங்களது பகுதியை ஆக்கிரமிக்க முயல்வதாக கூறி ஆப்கானிஸ்தானின் இந்த செயலுக்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்தது. இதனையடுத்து ரோர்காம் எல்லையை பாகிஸ்தான் அரசாங்கம் மூடியது. தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் இருநாட்டு இராணுவத்தினரும் மோதலில் ஈடுபட்டனர். இதனால், இரு நாடுகளின் எல்லையிலும் பெரும் பதற்றம் நிலவியது. அதே சமயம் இந்த எல்லையை மீண்டும் திறப்பது குறித்து இரு தரப்பு தலைவர்கள் பேச்சுக்கள் நடத்தினர். இதில், உடன்பாடு ஏற்பட்டதால் 25 நாட்களுக்குப் பிறகு ரோர்காம் எல்லை நேற்று மீண்டும் திறக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியாமி ஓபின் ரென்னிஸ் நவோமி அபார வெற்றி




மியாமி, மார்ச்.22

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் அபார வெற்றி பெற்ற நவோமி ஒசாகா 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மியாமி ஓபின் சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் நம்பர் 1 வீராங்கனையான ஜப்பானின் நவோமி ஒசாகா, ரஷ்யாவின் லுட்மிலா சம்சோனோவாவுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய நவோமி ஒசாகா 6 - 2 மற்றும் 6 - 4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார். (எ)

## ஆர்.ஆர். அணி தலைவராக ரியான் பராக் நியமனம்



ஜெய்ப்பூர், மார்ச்.22

ஐ.பி.எல். 18ஆவது சீசன் இன்று தொடங்குகிறது.

இந்த நிலையில் நடப்பு சீசனில் ராஜஸ்தான் றோயல் அணியின் (ஆர். ஆர்.) முதல் 3 போட்டிகளுக்கான தலைவராக ரியான் பராக் நியமிக்கப்பட்டுள்ளார்.

காரணம், ராஜஸ்தான் அணியின் தலைவர் சஞ்சு சாம்சனுக்கு விரலில் ஏற்பட்ட காயம் இன்னும் முழுமையாக குணமடையவில்லை. அது சரியாக இன்னும் சில நாட்களாகும் எனக் கூறப்படுகிறது. சஞ்சு சாம்சன் முதல் 3 போட்டிகளில் விக்கெட் காப்பாளராக அல்லாமல் முழு நேர துடுப்பாட்ட வீரராக மட்டும் களமிறங்குகிறார். இதனால், அணித் தலைவர் பொறுப்பு ரியான் பராக்கிற்கு வழங்கப்பட்டுள்ளது. (எ)



## 3ஆவது சுற்றில் மரியா சக்காரி

மியாமி, மார்ச்.22

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் மரியா சக்காரி 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மியாமி ஓபின் சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் கிரீஸின் மரியா சக்காரி, இத்தாலியின் லூசியா ப்ரோனெட்டியுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 2 செட்களை ஆளுக்கொன்றாக கைப்பற்றிய நிலையில் 3ஆவது செட்டை சக்காரி கைப்பற்றி வெற்றி பெற்றார். இந்த ஆட்டத்தில் 6-3, 5-7 மற்றும் 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்ற சக்காரி 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். (எ)

# ஐ.பி.எல். இன்று ஆரம்பம் புதிய விதி அறிமுகம்

மும்பை, மார்ச்.22

ஐ. பி. எல். - 2025 கிரிக்கெட் போட்டி தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்த நிலையில், மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் போது புதிய விதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.



இந்தியாவில் நடைபெறும் ரி - 20 தொடரான ஐ.பி.எல். வெற்றிகரமாக 17 சீசன்களை நிறைவு செய்துள்ளது. இதன் 18ஆவது சீசன் இன்று ஆரம்பிக்கிறது.

இதனையொட்டி 10 அணிகளின் தலைவர்களுடன் பி. சி. சி. ஐ. ஆலோசனைக் கூட்டம் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பந்தின் மீது எச்சிலை தேய்ப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. அத்துடன் இம்பேக்ட் வீரர் விதிமுறை இன்னும் 2 ஆண்டுகள் (2027-ம் ஆண்டு வரை) தொடரும் என்று அறிவிக்கப்பட்டது.


மேலும், நடப்பு சீசனில் புதிய விதி ஒன்றும் அமுல்படுத்தப்படவுள்ளது. இதன்படி, இரவு நேர ஆட்டங்களில் 2ஆவது இன்னிங்ஸின்போது பனிப்பொழிவின் தாக்கத்தால் பந்து ஈரமாகி விடுகிறது. ஈரமான பந்தை சரியாக பிடித்து துல்லியமாக வீச முடிவதில்லை. இதனால், துடுப்பாட்ட வீரர்கள் எளிதில் ஓட்டம் குவித்து விடுகிறார்கள்.

இதைக் கருத்தில் கொண்டு இந்த ஐ. பி. எல். தொடரில் ஓர் இன்னிங்ஸில் இரண்டு பந்துகள் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதாவது 2ஆவது இன்னிங்ஸில் 10ஆவது ஓவருக்கு பிறகு பந்து வீசும் அணியின் தலைவர் பந்து அதிகம் ஈரமாகி விட்டதாக நினைத்தால் நடுவரிடம் புதிய பந்து கேட்கலாம். பனியின் தாக்கம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நடுவர் ஆராய்ந்து, அதற்கு ஏற்ப பந்தை மாற்றுவது குறித்து முடிவு செய்வார். (எ)

# பிளே ஓப் சுற்றுக்கு சென்னை செல்லாது

## வில்லியர்ஸ் கணிப்பு



கேப்டவுன், மார்ச்.22

18ஆவது ஐ. பி. எல். சீசனின் பிளேஓப் சுற்றுக்கு சென்னை அணி செல்லாது என்று தனது கணிப்பை ஏபி. டி. வில்லியர்ஸ் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தியாவில் நடைபெறும் ரி - 20 தொடரான ஐ. பி.எல்லின் 18ஆவது சீசன் இன்று தொடங்குகிறது. இதில் சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, கொல்கத்தா நைட் ரைட்சர்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், ராஜஸ்தான் றோயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் மற்றும் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் ஆகிய 10 அணிகள் கலந்து கொள்கின்றன.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்- பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன.

இந்தத் தொடர் குறித்து பல முன்னாள் வீரர்கள் தங்களது கணிப்பை வெளியிட்டு வருகின்றனர். அந்த வரிசையில் தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரரான ஏபி. டி வில்லியர்ஸ் இந்த தொடரில் பிளேஓப் சுற்றுக்கு முன்னேற வாய்ப்புள்ள அணிகள் குறித்து தனது கணிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது கணிப்பின் படி, மும்பை இந்தியன்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, குஜராத் டைட்டன்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆகிய அணிகள் பிளேஓப் சுற்றுக்கு முன்னேறும் என்று தெரிவித்துள்ளார்.

5 முறை சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை அவர் பிளேஓப் சுற்றுக்கு செல்ல வாய்ப்பில்லை என்று கணித்துள்ளது ரசிகர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

## உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெற்றது ஜப்பான் அணி



சைதமா, மார்ச்.22

2026ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர் அமெரிக்கா, மெக்சிக்கோ, கனடா நாடுகளில் நடைபெறுகிறது. தொடரை நடத்துவதால் இந்த 3 அணிகளும் நேரடியாக தகுதி பெற்றன. இவற்றை தவிர்த்து தற்போது முதல் அணியாக ஜப்பான் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடருக்கு தகுதி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் தனது சொந்த மண்ணில் நடைபெற்ற தகுதி சுற்று ஆட்டத்தில் ஜப்பான் அணி, பக்ரைனை எதிர்த்து விளையாடியது. இதில், ஜப்பான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன் மூலம் அந்த அணி உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறுவதை உறுதி செய்தது. அந்த அணி தரப்பில் டெய்ச்சி கமடா, டேக்புசா குபோ ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலில்...

இளைஞரின் சடலம் மீட்கப்பட்டது.

இளைஞரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சேந்தாங்குளம் பெரும் அலைகள் எழும் கடல் பகுதியாக உள்ளது. எனினும், அந்தப் பகுதியில் எந்த எச்சரிக்கை அறிவிப்பும் காட்சிப்படுத்தப்படவில்லை. முன்னரும், இந்தக் கடலில் குளித்த வர்கள் சிலர் உயிரிழந்தனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர். (ஐ-05)

## ஐ.எம்.எவ்வுக்கு...

பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பெரும்பாலான எதிர்க்கட்சிகள் குறிப்பாக, ஐக்கிய மக்கள் சக்தி ஐ. எம். எவ்வை தங்கள் உண்மையான அன்பு என்று நினைத்தன. இருப்பினும், ஐ. எம். எவ். அவர்களை கைவிட்டு, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை மிகவும் திறமையானவராக ஏற்றுக்கொண்டுள்ளது.

இதனால்தான், சர்வதேச நாணய நிதியத் தலைவர், அநுர குமாரவை துணிச்சலானவர் என்று கூறினார் என்றும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார். (ஐ)

## பயிற்சி...

இவர்கள் இருவரும் குருநாகல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சீன தயாரிப்பான கே-08 என்ற இந்த விமானம் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் இருந்து காலை 07.27 மணியளவில் புறப்பட்டு காலை 07.55 மணியளவில் விபத்துக்குள்ளானது.

விபத்தைத் தொடர்ந்து, விமானப் படை தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க விபத்து குறித்து விசாரிக்க ஏழு பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழுவை நியமித்துள்ளார். (ஐ)

## பிள்ளையான்...

ரி-56 ரக துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில், சந்திவெளி மற்றும் கிரானை சேர்ந்த தி. கிருஷ்ணரூபன், வ. திருச்செல்வம், கு. பாஸ்கரன், க. மகேந்திரன் ஆகிய நால்வரை ஏறாவூர் பொலிஸார் கைது செய்து, அவர்களுக்கு எதிராக வழக்கு தொடுத்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில், வழக்கின் முடிவில் நால்வரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். இதையடுத்து நால்வருக்கும் மரண தண்டனை வழங்கி நேற்று தீர்ப்பளித்தார் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி. ஜே. பிரபாகரன். (ஐ)

## 114மேலதிக...

நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அர்ச்சுனா எம். பி. உட்பட 23 பேர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்தார்.

வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு பெப்ரவரி 17ஆம் திகதி முதல் பெப்ரவரி 25ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெற்றது. இதன் பின்னர், இரண்டாம் வாசிப்பு 109 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் பதிவாகியிருந்தன.

இதைத் தொடர்ந்து வரவு - செலவு திட்டத்தின் குழுநிலை விவாதம் கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை 19 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றிருந்தது. (ஐ)

## தமிழர்களுக்கு நீதி...

விடயங்கள் வருமாறு,

"இலங்கையை மனித உரிமைகள் மீறல் மற்றும் போர் குற்றங்கள் மீறலுக்காக சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதை நான் எப்போதும் எதிர்த்து வந்துள்ளேன். நான் தொடர்ச்சியாக வலியுறுத்துவது என்னவெனில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் என்பதே.

"தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டுங்கள். இது உள்நாட்டு பொறிமுறையில் அமைய வேண்டும். இதனை செய்யக்கூடாது - செய்ய வேண்டாம் என நான் ஒருபோதும் கூறியதில்லை. இதன் காரணமாகவே நான் தேர்தல்களில் தோற்றேன்.

"நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாக குற்றஞ்சாட்டினார்கள். அது முடிவடைந்ததும் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவளித்தேன் என்று குற்றஞ்சாட்டினார்கள். இவற்றை விடுவோம்.

"நான் மேற்குலகில் சமீபத்தில் பார்த்தது என்னவென்றால் இரண்டு விதமான நிலைப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. உக்ரைன் தொடர்பிலேயே இந்த இரட்டை நிலைப்பாடு பின்பற்றப்படுகிறது. எனது தலைவர்கள், நண்பர்களின் எண்ணிக்கையை பார்க்கும்போது சுதந்திரமான நீதியான தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சியின்போது அவர்கள் கொல்லப்பட்டனர்.

"ஆனால், உக்ரைனுக்கு வழங்குகின்ற சாதக தன்மையை மேற்குலகம் எங்களுக்கு வழங்காது. ஆனால், உக்ரைன் ஜனாதிபதிக்கு அனைத்தையும் மாற்றுவதற்கான அனுமதியை அவர்கள் வழங்குகிறார்கள். இதன் காரணமாகவே ஜனாதிபதி ட்ரம்ப் ஜெலென்ஸ்கியை பார்த்து, "நீங்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவில்லை", என்றார்.

"அவர்களால் ஜனாதிபதி ட்ரம்பின் மீது பாயமுடியுமென்றால் எங்களின் நிலைமை என்ன? ஆகவே, எங்களால் என்ன செய்ய முடியுமென்றால் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே. அவர்களுடன் (தமிழரிடம்) பேசுங்கள். மாகாண சபைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்குங்கள். குற்றவாளிகள் யார் என்றாலும் தண்டியுங்கள். நான் பல நடவடிக்கைகளை ஆரம்பித்தேன். ஆனால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இரட்டை நிலைப்பாட்டை பின்பற்ற விரும்பினால் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் அது அமைந்திருக்கக்கூடாது.

"நான் எவருக்கும் எதிரானவன் அல்ல. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் ஆசிய கிளையின் செயல்பாடுகள் குறித்து விசாரணை இடம்பெற்றால் நாங்கள் தொடர்ந்தும் நீடிக்கலாம். நவநீதம்பிள்ளையுடன் செயல்படுவது சுலபமாக இருந்தது அவர் அனைத்தையும் புரிந்துகொண்டார். அவர் எங்களின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவர் அனைத்தையும் புரிந்துகொண்டார். அவருடன் பேசமுடியும். ஆனால், தற்போதுள்ளவர்கள் எங்களை நோக்கி சத்தமிடுகின்றனர். எங்களால்தான் அவர்கள் அங்கிருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

"நாங்களே இரண்டாம் உலக யுத்தத்தில் போரிட்டோம். நாங்களே ஐரோப்பாவை விடுதலை செய்தோம். எத்தனை ஐரோப்பியர்கள் ஹிட்லருக்கு எதிராக போரிட்டார்கள் - 25 இலட்சம் இந்தியர்கள் போரிட்டார்கள் - இலங்கையர்கள் போரிட்டார்கள் - ஆபிரிக்கர்கள் போரிட்டனர். நாங்கள் போரிட்டு ஹிட்லரை தோற்கடித்திருக்காவிட்டால் உங்களால் மனித உரிமைகள் சாசனம் ஒன்றை உருவாக்க முடியாமல் போயிருக்கும்", என்றார். (ஐ)

## ஒதுக்கீட்டு சட்டமூலம் சான்றுரைக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 22

2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலம் நேற்று வெள்ளிக்கிழமை மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட 2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டமூலத்தை அரசமைப்பின் 79 வது உறுப்புரைக்கு அமைய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கையொப்பமிட்டு சான்றுரைப்படுத்தினார். இதற்கமைய, ஒதுக்கீட்டு சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாக அமுலுக்கு வருகிறது. (ஐ)

## பெண்கள் மற்றும்...

இவ்வாறு, அதிக எண்ணிக்கையிலான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட 2017 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டம் இல. 17இல் செய்யப்பட்ட புதிய திருத்தத்தின்படி வேட்புமனுவில் பெண் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவ சதவீதத்தை சேர்ப்பதற்கான புதிய விதிமுறைகள் பலரை குழப்பத்தில் ஆழ்த்தின. திருத்தங்களின்படி, ஒவ்வொரு வேட்புமனு பட்டியலிலும் 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயம் தேவை. இதேநேரத்தில் விகிதாசார பிரதிநிதித்துவ பட்டியலில் 50 வீதம் பெண் வேட்பாளர்கள் இருக்க வேண்டும்.

இளைஞர் பிரதிநிதித்துவத்தின் வயதைக் குறிப்பிடுவதற்கு சான்றளிக்கப்பட்ட பிறப்பு சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் ஒவ்வொரு பட்டியலிலும் சேர்க்கப்பட வேண்டும். பலர் அவற்றை சேர்க்கத் தவறிவிட்டனர் அல்லது அதனை சரியான முறையில் அவற்றை இணைக்கவில்லை.

இந்தப் பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு போதுமான நேரம் இருந்தபோதிலும் அனைவரும் கடைசி நிமிடத்தில் அவற்றை சமர்ப்பித்தனர். வேறு வழியில்லாமல் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. 2 ஆயிரத்து 900 வேட்புனுக்களில் 400 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இது விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் எதுவும் செய்ய முடியாது. சட்ட தலையீட்டை நாடுவது விண்ணப்பதாரர்களின் பொறுப்பு - என்று தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

## சம்பூர் மின்சார நிலையம்...

உத்தியோகபூர்வமாக வங்குரோத்து நிலையடைந்த நாட்டையே பொறுப்பேற்றோம். இந்த ஆண்டு 4 இலட்சத்து 99 ஆயிரம் கோடி ரூபாய் அரச வருவாய் எதிர்பார்க்கப்படும் நிலையில், கடன்களுக்கான வட்டி செலுத்தலுக்கு 2 இலட்சத்து 95 ஆயிரம் கோடி ரூபாய், அரச சேவையாளர்களுக்கு சம்பள ஒதுக்கீடு ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 200 கோடி ரூபாய், ஓய்வுதிய கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு 40 ஆயிரத்து 400 கோடி ரூபாய் என்ற அடிப்படையில் காணப்படுகிறது. மிகுதி 25 ஆயிரத்து 600 கோடி ரூபாய் இதுவே தற்போதைய பொருளாதார நிலைமை. ஆகவே அவசரமடையக்கூடிய நிலையில் பொருளாதாரம் இல்லை என்பதை முதலில் விளங்கிக் கொள்ளுங்கள்.

அரச நிறுவனங்கள் கடன் மற்றும் நட்டம் ஆகியவற்றை எதிர்கொண்டுள்ளன. வருடாந்தம் இந்த நிலைமையே காணப்படுகிறது. ஈட்டிக் கொள்ளும் வருமானத்தை காட்டிலும் செலவுகள் அதிகளவில் காணப்பட்டுள்ளன. பொருளாதாரத்துக்கு இயைவானதாக செயல்படும் நிறுவனங்களுக்கு இடையில் பெரும் இடைவெளி காணப்படுகிறது.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் எம்மிடம் பல கேள்விகள் காணப்பட்டன. ஆட்சி பொறுப்பை ஏற்கும் போதே சர்வதேச நாணய நிதியத்தின் செயல்திட்ட யோசனை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டில் இருந்து விலகுவோம் என்றே ஒரு தரப்பினர் எதிர்பார்த்தார்கள். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

பொருளாதார ரீதியில் தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் மற்றும் கடன் வழங்குநர்களுக்கும் நம்பிக்கை யளித்துள்ளோம். டொலருக்கு நிகராக ரூபாயின் பெறுமதியை உறுதிப்படுத்தி யுள்ளோம். வங்கி கட்டமைப்பின்மீதான சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக் கையை வெற்றி கொண்டுள்ளோம். வங்கி வட்டி வீதத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வந்துள்ளோம்.

வரி வருமானத்தை அதிகளவில் ஈட்டிக் கொள்ளும் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை மாற்றியமைத் துள்ளோம். இந்த மூன்று மாத காலங்களில் இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் வருமானம் எதிர்பார்த்த நிலைமை காட்டிலும் அதிகரித்துள்ளது. இந்த சாதக நிலையை தொடர்ந்து மேம்படுத்திக்கொள்வோம்.

பொருளாதார ரீதியில் ஏதேனும் சந்தேகம் காணப்பட்டால் எம்முடன் பேச்சில் ஈடுபடுங்கள். சந்தேகத்துடனான விடயங்களை மக்கள் மத்தியில் குறிப்பிட வேண்டாம். பொருளாதார ரீதியிலான விடயங்களுக்காக பேச்சில் ஈடுபட தயாராகவுள்ளேன்.

பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவா ரணம் வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ஆட்சிக்கு வந்தவுடன் முன்னெடுத்தேன்.

பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதிய கொடுப்பனவு வேண்டாம் என்று கடிதம் வழங்கியுள்ளேன். மாற்றத்தை என்னில் இருந்தே ஆரம்பிப்பேன். கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியத்தையும் ஜனாதிபதிக்கான கொடுப்பனவையும் பெற்றுக்கொண்டு பலர் திருட்டு பூனை போல் இருந்துள்ளார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சரான பின்னர் உறுப்பினருக்கான கொடுப்பனவும் கிடைக்கப்பெறும், அமைச்சருக்கான கொடுப்பனவும் வழங்கப்படும். கரண்டி கையில் உள்ளதால் இவர்கள் தமக்கு வேண்டியவாறு பரிமாறிக் கொண்டார்கள். என் அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அமைச்சு , பிரதி அமைச்சு பதவிகளுக்கான கொடுப்பனவுகளை மாத்திரமே பெறுகிறார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கும் முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை வரையறுப்பதற்கும் உரிய சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். அனைவரும் கையுயர்த்தத் தயாராக இருங்கள்.

வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்னைகளுக்கு சிறந்த முறையில் தீர்வு காணப்படும். 35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும். தகுதிகளின் அடிப்படையில்தான் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்படும். முறையற்ற வகையில் நியமனங்களை வழங்க முடியாது.

எவருடனும் எனக்கு தனிப்பட்ட பகைமை கிடையாது. ஆகவே தயவு செய்து மாற்றமடையுங்கள். நாட்டை கட்டியெழுப்பும் அரிய வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. நாட்டை முன்னேற்றும் இலக்கை வெற்றிக்கொள்வோம். இந்த சிறந்த வாய்ப்பில் எதிர்க்கட்சிகளும் பங்குதாரர்களாக வேண்டும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பலஸ்தீனர்களுக்கு ஆதரவளியுங்கள்!

## ஹக்கீம் சபையில் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 22

காஸா மீதான தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், பலஸ்தீன மக்களுக்கு நீதி கோரி இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று பாராளுமன்றத்தில் விசேட உரை நிகழ்த்தினார்.

இதன்போது பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கு நூதன முறையில் எதிர்ப்பைத் தெரிவித்தும், பலஸ்தீன தேசிய கொடியைக் கழுத்தில் அணிந்தபடி அவரது கருத்துக்களை முன்வைத்திருந்தமை விசேட அம்சமாகும்.

புனித ரமழான் நோன்பு காலம் என்பதால், காஸா மீதான தாக்குதலுக்கு சர்வதேச மட்டத்தில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# கராப்பிட்டிய வைத்தியசாலையில் புற்றுநோய்ச் சிகிச்சை ஸ்தம்பிதம்!

கொழும்பு, மார்ச் 22

கராப்பிட்டிய போதனா மருத்துவமனையில் கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரத்தைப் பயன்படுத்தி புற்றுநோய் நோயாளிகளுக்கு புதிய சிகிச்சைகளைத் மேற்கொள்வது தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ளது.

அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது. கதிர்வீச்சு சிகிச்சை திட்டமிடல் கணினி அமைப்பில் ஏற்பட்ட கோளாறே இதற்கான காரணம் என அரசாங்க கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்ம விக்ரம தெரிவித்தார். (அ)

# இலங்கை முழுவதும் சிக்குன்குனியா நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 22

இலங்கை முழுவதும் சிக்குன்குனியா நோயாளிகளின் எண்ணிக்கை அண்மைக் காலத்தில் அதிகரித்து வருவதால், அதன் அறிகுறிகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று சுகாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, இந்த நோய் பொதுவாக திடீரென அதிக காய்ச்சலுடன் ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து கடுமையான மூட்டு வலி ஏற்படுகிறது. இது குறைந்தது ஒரு மாதத்துக்கு நீடிக்கும்.

தசை வலி, தலைவலி, குமட்டல், சோர்வு மற்றும் தோல் வெடிப்புகள் ஆகியவை பிற பொதுவான அறிகுறிகளாகும்.

பெரும்பாலான நோயாளிகள் ஒரு வாரத்திற்குள் குணமடைந்தாலும், நீடித்த மூட்டு வலி பல மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட நீடிக்கும். குறிப்பாக வயதான நபர்களிடையே நோயின் தன்மை நீடிக்கும்.

கொசு இனப்பெருக்கம் செய்யும் இடங்களை அகற்றுவதுதான் தொற்றுநோயைக் கட்டுப்படுத்த மிகவும் பயனுள்ள வழியாகும் என்று சுகாதார் நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

# உரிமைக்கான எங்கள் போராட்டத்தை இனவாதமாக அர்த்தப்படுத்தவேண்டாம்!

## கொழும்பில் தையிட்டி காணி உரிமையாளர்கள்

கொழும்பு, மார்ச் 22

**உரிமைகளுக்கான எங்களின் போராட்டத்தை இனவாதமாக அர்த்தப்படுத்தவேண்டாம் என நாங்கள் தென்னிலங்கை மக்களை கேட்டுக்கொள்கின்றோம் என தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களில் ஒருவரான சுகுமார் சாருஜன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நில உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பின் ( பார்ள்) ஏற்பாட்டில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உட்பட பல அரசாங்கங்கள் எங்கள் நிலங்களை எங்களிடம் தருவதாக உறுதியளித்தன.

ஆனால் இது தொடர்பான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இலங்கையின் அரசமைப்பின் ஊடாக பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரமே இந்த விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியாதமைக்கு காரணம் என நாங்கள் கருதுகின்றோம்.



இவை எங்கள் மூதாதையர்களின் நிலங்கள்,அங்குள்ள பௌத்த ஆலயத்தின் மதகுரு கூட இந்த நிலம் எங்களுக் குச் சொந்தமானது என்பதை ஏற்றுக் கொண் டுள்ளார்.

ஆனால் அவர் இதனை பொதுவெளியில் தெரிவிக்கத் தயங்குகின்றார்.எங்களின் இந்த போராட்டம் சிங்கள மக்களுக்கோ அல்லது பௌத்தமதத்துக்கோ எதிரானது இல்லை.எங்கள் நிலங்களை மீளப்பெறுவதற்காகவே நாங்கள் போராடுகின்றோம்.

உரிமைகளுக்கான எங்களின் போராட்டத்தை இனவாதமாக அர்த்தப்படுத்தவேண்டாம் என நாங்கள் தென்னிலங்கை மக்களை கேட்டுக்கொள்கின்றோம்-என்றார். (அ)

# நாட்டில் பாலர் பாடசாலைகளை ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 22

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் அனைத்து நிறுவனங்களையும் மீண்டும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மகளிர் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனங்களின் ஒழுங்குமுறையை நெறிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதி அமைச்சர் நாமல் சுதர்சன தெரிவித்தார்.

தற்போது, முன்பள்ளி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக நாட்டில் சுமார் 65 நிறுவனங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு குடும்ப வைத்தியர் திட்டம்

கொழும்பு, மார்ச் 22

குடும்ப மருத்துவர் என்ற கருத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது.

ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதும், பொதுமக்களுக்கு மிகவும் திறமையான சேவைகளை வழங்குவதும் இதன் நோக்கம் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி தெரிவித்தார்.இதன் கீழ், மூன்று கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தலா ஒரு வைத்தியர் நியமிக்கப்படுவார் என்றும் மேலும் இதற்காக ஒரு தனி மையம் நிறுவப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# தையிட்டி போராட்டத்துக்கு அச்சுறுத்தல் ஒன்றரை வருடத்தின் பின்னர் விசாரணை

## மனித உரிமை ஆணைக்குழு ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், மார்ச் 22

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பொலிஸாரினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பில் ஒன்றரை வருடத்தின் பின்னர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றக் கோரி 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் முன்னெடுக்கப்பட்டிருந்த ஜனநாயக ரீதியான போராட்டத்தின் போது பலாலி பொலிஸாரால் அராஜகமான அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டு சட்டவிரோத கைதுகள் இடம்பெற்றிருந்தன.

இதனையடுத்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்திய காரியாலயத்தில் எட்டுப் பேரினால் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

ஆயினும், காரணம் எதுவுமின்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை காரியாலயத்தால் குறித்த முறைப்பாட்டுக் கோவைகள் யாழ். பிராந்திய காரியாலயத்திலிருந்து கையேற்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணை எதுவும் நடைபெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு காரியாலயத்தில் நேற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

கடந்த ஒன்றரை வருடங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்படாதிருந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடு குறித்து பாராளுமன்ற வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் போது இலங்கையின் மனித உரிமைகள் குறித்த விடயதானத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியிருந்த நிலையிலேயே இந்த விசாரணை நேற்று முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் விவகாரம்

# தன்னை கைது செய்வதை தடுக்கக்கோரி ஷானி தாக்கல் செய்த மனு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 22


உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் தொடர்பில் அதனை தடுக்கத் தவறியதாகக் கூறி தன்னை கைது செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முயற்சிப்பதாகவும் அதனைத் தடுக்க உத்தரவொன்றினை பிறப்பிக்கக் கோரியும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரும் மத்திய விசாரணை பணிப்பகத்தின் தற்போதைய பணிப்பாளருமாகிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.இந்த மனு நேற்று உயர்நீதிமன்ற நீதியரசர் ஜனக் டீ.சில்வா தலைமையிலான பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சம்பத் அபேவர்தன ஆகியோர் அடங்கிய நீதியரசர்களை உள்ளடக்கிய அமர்வு முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் முன கூட்டிய தகவல்கள் கிடைத்திருந்தபோதிலும் சஹ்ரான் ஹாஷிம் தொடர்பில் உரிய விசாரணை களை முன்னெடுக்கவில்லையென கூறியே குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபே சேகரவை கைது செய்ய முயற்சிகள் இடம்பெறுவதாக கூறியே இந்த மனு ஷானி அபேசேகரவினால் தாக்கள் செய்யப்பட்டது.

குளியாப்பிடிய நீதிவான் நீதிமன்றத் திலேயே இது தொடர்பிலான பீ அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் அதன்படி தன்னை கைது செய்ய குற்றப்புலனாய்வுப் பிரிவு முயற்சிப்பதாக வும் அதனை தடுத்து நிறுத்த உத்தரவொன்றினை பிறக்கு மாறும் ஷானி அபேசேகர இந்த மனு ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

# பத்தரமுல்லையில் பதற்றமான நிலை!

கொழும்பு, மார்ச் 22

வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தின் போது, ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பதற்ற மான சூழ்நிலை ஏற் பட்டதாக தெரிவிக் கப்பட்டது.



இந்தச் சம்பவம் கொழும்பு, பத்தர முல்லை பொல்துவ சந்திக்கு அருகில் நேற்று பதிவாகியுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் கடந்த சில நாட்க ளாக அரசாங்கத்திடம் வேலை கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org